Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மலர் 20 } ஈரோடு 16-11-1946 கார்த்திகை மீ 1உ { இதழ் 6

# சென்னையில் டிப்புசுல்தான் நாள்

## பெரியார் பேச்சு

தலைவர் அவர்களே,

தோழர்களே!

இன்று இந்தப் பரந்த இந்தியா கண்டத்தில் இமயம் முதல் கன்னியா குமரி வரையில் அநேகமாக எல்லா முக்கியப் பட்டணங்களிலும், சிற்சில கிராமங்களிலும் கூட பல இடங்களில் குறிப்பாக இந்து முஸ்லிம் கலவரங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. நடக்காத இடங்களில் நடக்கும்படியாக அரசியல் தலைவர்களும், மதத் தலைவர்களும் பொறுப்பற்ற கலகக்காரர்களும், அரசியல் "தேசிய"ப் பத்திரிகைகளும் தூண்டி விட்டுக்கொண்டு இருக்கின்றன. இதனால்நாட்டுமக்கள் அநேகர் உள்ளத்தில் கலகத் தீ புகைந்துகொண்டே இருக்கின்றது. இந்தச் சமயத்தில் இப்போது இங்கு ஒரு முஸ்லிம் மன்னரின் அதுவும், இந்த நாட்டை ஆண்ட ஒரு முஸ்லிம் மன்னரின் (டிப்புவின்) நாள் கொண்டாடுவதற்கு கூடி இருக்கிறோம்.

குறிப்பாக சர்க்காரார் இந்த நாளையும் மக்கள் உணர்ச்சியையும் பற்றிக் கவலைகொண்டு எங்குக் கலவரம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சி எந்த விதமான பொதுக்கூட்டமும், எந்தப் பொது இடத்திலும் இன்று நடத்தக்கூடாது என்று தடுத்து இருக்கிறார்கள். அப்படி இருந்தும் இந்தக் கூட்டம் நடக்கிறது. இப்போது நடைபெறும் கூட்டத்திற்கு அனுமதி தனியாய்ப் பெற்று இருப்பதாகச் சொன்னதினாலேயே நான் வந்தேன். ஆகையால் ஜாக்கிரதையாகக் கூட்டமும், பேச்சுகளும் நடத்தப்பட வேண்டி இருக்கின்றன.

இந்த நாடு இன்றைய நிலையில் பல இனம், பல மதம், பல ஜாதி, பல மாறுபட்ட இலட்சியம் உள்ள மக்கள் நிறைந்த நாடாக இயற்கையில் அமைந்து விட்டதால் இனம், ஜாதிகலகங்களுக்குப் பிறப்பிடமாகவும் எப்போதும் நடப்பிடமாகவும் நிரந்தர நிலைபெற்ற இடமாகவும் ஆக்கப்பட்டு இருக்கிறது. ஒரு சர்க்கஸ்காரனுக்குப் பல சுபாவமுள்ள ஜீவன்கள் அடங்கி இருக்கும்படி அடக்கப்பட்டிருப்பதுபோல் இந்நாட்டு மக்கள் ஒரு அன்னியனின் ஆதிக்கத்தில், காப்பில் இருந்து வருகிற காரணம் ஒன்றினால் மட்டுமே அதில் ஆபத்தானப் போராட்டம் இல்லாமல் ஒரு மாதிரியாக யாவரும் காலந் தள்ளி வாழ முடிந்தது.

இப்போது அன்னியனின், அதாவது இந்நாட்டில் இருந்து வரும் மக்கள் அல்லாத ஒரு அன்னியனின் ஆதிக்கம் காப்பு, என்பது மாறி வருகிறது, மாறப் போகிறது; மாறுகிற முயற்சி நடக்கிறது என்கின்ற போது புகைந்து கொண்டிருந்த பூசல் நெருப்பு எரியும்படியான நிலைமைக்கு வந்து விட்டது. இது இத்தனை நாளும் இருந்துகொண்டுதான் வந்தது என்றாலும் இந்தப் போராட்டம் என்னும் நெருப்புக்குச் சில தந்திரக்கூட்டத்தார் அரசியல் சுதந்திரம், விடுதலை என்கின்ற போலிப் போர்வையைக் கொடுத்துத் தந்திரமாய் நடத்தி ஒரு அளவில், அக்கூட்டத்திற்கு வெற்றிபெற்றுவிட்டதால் இப்போது "சுதந்திரம் கிடைத்து விட்டது, கிடைக்கப்போகிறது" என்று சொல்லவேண்டிய நிலைமை அந்தக் கூட்டத்திற்கு வந்துவிட்டதால் அந்தக்கூட்டத்திற்கு இனியும் விடுதலை சுதந்திரம் என்கின்ற பேச்சைப்பேச இடமில்லாமல் போய்விட்டதால் 'உண்மையான' நிறத்தோடு வெளிவரவேண்டியதாகி நாடுமுழுதும் ஜாதிமதம் என்னும் பேராலேயே போராட்டங்கள் நடந்து வருகின்றன. இதை இப்போது யாரும் மறைப்பதற்கில்லை. இந்த நாட்டிற்கு இது

பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இயற்கையாக இருந்து வருகிறது.

சரித்திர ரூபமாக அதிகப் காணமுடியா விட்டாலும் புராண இதிகாச மூலமாக வெகு காலத்திற்கு முன்பாகவே பலமான ஆரியர் திராவிடர் போராட்டம், அல்லது சூரர்கள் அசுரர்கள் போராட்டம் நடந்திருக்கிறது என்பது விளங்குகிறது. பிறகு புத்தர் ஆரியர் போராட்டமும், ஒருவரை யொருவர் கொடுமை செய்ததும் நடந்திருக்கிறது. பிறகு சமணர் சைவர் போராட்டமும், கொலை, கழுவேற்றல் ஆகிய பாதகச் செயல்களும் நடந்திருக்கின்றன. பிறகு ஆரியர்கள் முஸ்லிம்கள் போராட்டங்களும் நடந்திருக்கின்றன. ஐரோப்பியர் ஆட்சிகாலத்தில் அதிகம் இல்லை என்றாலும் இன்று இதுவரை நடந்ததை விட சற்று அதிகமாகவே நடக்கின்றன.

இந்தத் தமிழ்நாட்டில் இந்து முஸ்லிம் கலகம் அதிகமில்லையானாலும் இப்போது நன்றாய் விதை ஊன்றப்படுகிறது என்றாலும் பழயகாலத்தது போலவே ஆரியர் திராவிடர் போராட்டம் வெகுதாளாக நடந்துகொண்டு இருக்கின்றது. இவையாவும் இதுவரை அரசியல் போர்வையில் இருந்து கொண்டு போரிட்டு இருந்தாலும் இன்று பச்சையாய் "ஜாதி மதப் போராட்டம்தான் இதுவரை நடந்துவந்த அரசியல் போராட்டம் என்று சொல்லப்பட்டு வந்தது" என்பதாக ஆகிவிட்டது.

இந்த நிலையில் டிப்புச் சுல்தான் நாளாகிய இந்த நாளில் டிப்புவின் சரித்திரத்தைப் பேசுவதைவிட இந்த மாதிரி போராட்டங்கள் இனி நடக்காமல் இருப்பதற்கு ஏதாவது வழி உண்டா என்று பேசுவது பயன்படக்கூடியதாய் இருக்கக் கூடும் என்று நினைக்கிறேன்'

### மதப்போராட்டம்

தோழர்களே, மதப்போராட்டம் என்பதில் ஏதாவது அறிவுடைமையே மேன்மையோ இருக்கமுடியுமா என்று சிந்தித்துப் பாருங்கள். இன்றைய மதப் போராட்டம் என்பது ஒருவிதமான வெறி அல்லது மக்களை மக்கள் ஏய்த்துப் பிழைக்கச் சுயநல வழி என்பதல்லாமல் வேறு அதில் என்ன இருக்கிறது? பொதுவாகவே மதம் என்பது மக்கள் கூடிவாழும் ஜீவன்களானதால் அந்தக் கூட்டு வாழ்க்கை லட்சியத்திற்கு ஒரு நடப்பு முறைத் திட்டம் என்பதல்லாமல் அதாவது மனிதன் மற்ற மனிதனிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும், மனிதனுக்கு மனிதன் எப்படி உதவ வேண்டும் என்பதல்லாமல் வேறு என்ன காரியத்திற்காக மதம் இருக்கமுடியும் அல்லது வேண்டியிருக்கும்? என்று யோசித்துப்பாருங்கள். கடவுளுக்கும் மதத்துக்கும் அதிக மந்தத்தை உண்டாக்கவேண்டிய அவசியமே இல்லை. சர்வ வல்லமை உள்ள கடவுள் ஒவ்வொன்றையும் சிருஷ்டித்து ஒவ்வொரு காரியத்தையும் தானே நடத்திக்கொண்டு வருகிறார் என்றால் பிறகு கடவுளிடத்தில் நமக்குக் கடமை என்ன இருக்க முடியும். முடியுமானால் கடவுள் சிருஷ்டிகளிடத்தில்தானே நமது வேலை இருக்கவேண்டும்? இதுதானே எல்லாமதக்காரர்களின் தத்துவமாக இருந்து வருகிறது. அப்படி இருக்க மதத்தின்பேரால் கடவுளோ, கடவுளின் பேரால் மதமோ வேறுபட்டிருக்க அவசியமே இல்லை. ஆனால் எல்லா மதக்காரர்களும் இந்தத் தத்துவத்துக்குக் கட்டுப்பட வேண்டியவர்களாய் இருந்தாலும் மனிதன் மற்ற மனிதனை வேறு ஒரு ஜீவனாக அதாவது தான் ஒரு மனிதன் அவன் ஒரு மனிதன் என்று தனியாக எண்ணுவதினாலேயே, எண்ணுவது இயற்கை சுபாவமாக மாற்ற முடியாததாக இருப்பதாலேயே அந்தப்படி வேறாக எண்ணப்பட்ட மனிதனிடத்தில் ஜீவன்களிடத்தில் எப்படி நடந்து கொண்டால் வாழ்க்கையில் அசௌகரியம் இல்லாமல் இருக்கும் என்பதற்காக அறிஞர்கள் அனுபவசாலிகள் முதலியவர்களால் தொகுக்கப்பட்ட திட்டங்களாகும். இவை மாற்றமடைந்து வேறுவேறாக ஒன்றுக்கொன்று முரண்பாடாகக்கூட இருப்பதற்குக் காரணமென்னவென்றால் அந்தந்தக் காலநிலை, அறிவு நிலை, அனுபவநிலை, தொகுத்தவர்கள் ஆசை (லட்சிய)நிலை என்பதல்லாமல் மற்றபடி மாறுபாடுகளும் முரண்பாடுகளும் கடவுள் சித்தமாக இருந்திருக்க முடியாது.

இப்படியாக மனிதனுக்கு மனிதன் உதவவும், மனிதனால் மனிதனுக்கு அசௌகரியமில்லாமலிருக்கவும் என்று செய்யப்பட்ட மதக்கொள்கைகள் இன்று நடக்கும் மாதிரியான மனிதனுக்கு மனிதன் கொடுமை இழைத்து அதனால் மனித சமுதாயம் துன்பமும், தொல்லையும் அடையும்படியாக ஏற்படுவதற்கு பயன்படுத்தப்படுகிறது என்றால் மதம் என்றால் "மதம் பிடித்த திமிரான காரியம்" என்று சொல்லப்படுவதுபோல் ஒரு ஆணவமான காரியமோ அல்லது அறியாமையான காரியமோ அல்லது சுயநலத்துக்காக பிற மக்களை வஞ்சிக்கும்படியான காரியமோ என்று தான் சொல்லவேண்டும். இதை யாராவது தைரியமாக, நன்றாக

(தொடர்ச்சி 7-பக்கம்)

# சில்லறைக் காசு

("காலி மணிபர்ஸ்")

## ஆரிய வட்டாரத்தில்!

சுயமரியாதைக்காரர் வேலை பலனளிக்கவில்லையோ என்று சிலர் சந்தேகப்படலாம்! ஆனால் நான் சந்தேகப்பட்டதில்லை! பழைய சூனாமானா! இரண்டொரு உதிரிப் பூக்கள் சைவக்கோலம் பூண்டு திரிகிறதுகள்! ஆனால் ஆயிரக்கணக்கான புதியபுதிய வாசனைப்பூக்களும் வர்ணப் பூக்களும் சு. ம. மாலையில் தொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆரிய வட்டாரத்தில் சு. ம. என்றால் உள்ளூரக் குலை நடுக்கம்! ஏன்? மற்ற சீர்திருத்தங்களைப் போல முதுகில் அடிக்கும் இயக்கம் அல்ல, சு. ம. இயக்கம் நேரே பார்ப்பனீயத்தின் வயிற்றிலேயே அடிக்கும் இயக்கம்! நான் சொல்லுவது சரிதானா என்று சந்தேகப்படுகிறவர்கள், பார்ப்பனர் மத்தியில் நின்றுகொண்டு, "நான் ஒரு சு. ம." என்று சொல்லிப் பாருங்கள்! அவர்கள் முகம் "மூன்றாம் பேஸ்து" முகமாக மாறுவதைக் காணலாம்! அருமையான வேலை செய்த உயர்தரமான மருந்து! தலைசிறந்த டாக்டர்கள் தயார்செய்தது!

ஓர் உதாரணம் பாருங்கள்!

"தீப மங்கள ஜோதியான முருகன்...... தமிழ்க் கடவுளா, அந்தணர் கடவுளா என்ற பத்தாம்பசலி விவாதத்தில் கீதபதி (வி. என். குப்புசாமி) அய்யர்போன்ற மேதாவிகள் இறங்குவது வருந்தத்தக்கது......

.........கடவுள் உண்டா என்ற விஷயத்துக்கே ஆபத்து வந்திருக்கிற இந்தக் காலத்தில் இந்த மாதிரிச் சிறு ஆராய்ச்சிகள் நன்மை தராமாட்டா"

இந்தமாதிரி எழுதியிருக்கிறது, ஒரு புத்தகத்தைப்பற்றிய மதிப்புரையில்! எதில்? நவம்பர் 6ந்தேதி "சுதேச மித்திரனில்'—4ம் பக்கத்தில்!

கடவுள் விஷயம் இருக்கிறதே! அது மகா பெரிய விஷயம்! அதில் சு. ம. க்கள் தலையிடுவதேயில்லை. மனிதர்களைப்பற்றிக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் லட்சக்கணக்கிலிருப்பதனால், கடவுளைப்பற்றி அவரே கவனித்துக்கொள்ளட்டும் என்று விட்டிருக்கிறான், சுயமரியாதைக்காரன்! கடவுள் இல்லையென்று சொல்லவே சு. ம. வுக்கு நேரமில்லை. ஆனால், கடவுள் அல்லாதவைகளைக் காட்டி "இதுதான் கடவுள்," என்றால், சு. ம. காரன் சும்மா விடமாட்டான்! "கடவுளுக்குத் துணி எதற்கு? பூணூல் எதற்கு? பூ எதற்கு? அபிஷேகம் எதற்கு? சாப்பாடு எதற்கு? சாந்திமுகூர்த்தம் எதற்கு? வைப்பாட்டி எதற்கு? காதலி எதற்கு? தேர் எதற்கு? திருவிழா எதற்கு? வாணவேடிக்கை எதற்கு? சூடன் எதற்கு?......பாட்டுத்தான் எதற்கு?" என்று ஆயிரம் "எதற்கு"களைக் கொட்டி விடுவான்!

பதில்கூற முடியாத கடவுள் வக்கீல்கள்—அதாவது, பக்தர்கள்—"இவன் நாஸ்திகன்" என்று மட்டும் சபித்துவிட்டு (வாதாடத் தெரியாத அட்வகேட்களைப்போல) கோர்ட்டைவிட்டு வெளியேறிவிடுவார்கள்! நாத்திகம் பேசி நாத்தழும்பேறியவர்களைக்கண்டு, ஆத்திகம்பேசி ஆத்திரப்பட்ட சைவ சிகாமணிகளின் ஆஸ்திக சங்கம், "கடவுள் கிருபையால்" அகால மரணம் அடைந்துவிட்டது. "அவனன்றி ஓரணுவும் அசையாது!"

o o

## தற்கொலைப் பூச்சாண்டி!

தோழர் காந்தியார் மீண்டும் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகப் பயமுறுத்துகிறார்! பீகார் வகுப்புக் கலவரம் உடனே நிற்காவிட்டால் சாகும்வரையில் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகக் கூறுகிறார்! நமது காந்தியார் ஒரு விநோதமான மனிதர்—அதாவது, மகாத்மா! எது எதற்கு உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். "உடனே போரை நிறுத்தாவிட்டால் உண்ணாவிரதம் இருப்பேன்!", என்று ஹிட்லரிடம் சொன்னாரா? "அணுக்குண்டுகள் எல்லாவற்றையும் இந்த நிமிஷமே அழிக்காவிட்டால் சாகும்வரையில் உண்ணாவிரதமிருப்பேன்!" என்று அமெரிக்காவிடம் கூறினாரா? "இங்கிலீஷ்காரர் அத்தனை பேரும் இந்த நோட்டீஸ் கண்ட ஒரு மாதத்திற்குள் இந்தியாவைவிட்டு வெளியேறாவிட்டால் உண்ணாவிரதமிருந்து உயிரை விடுவேன்!' என்று வைஸ்ராய் வேவலுக்கு அறிவித்தாரா? "பாக்கிஸ்தான் கோரிக்கை கைவிடாவிட்டால் இன்று முதல் 25 நாட்களுக்குள் உண்ணாவிரதத்தினால் உயிர்துறப்பேன்!" என்று ஜனாப் ஜின்னாவிடம் கூறினாரா? "டிசம்பர் 1ந்தேதிக்குள் ஆதித்திராவிடர்கள் எல்லோரையும் எல்லாக் கோவில்களுக்குள்ளும், தெருக்களிலும் குளங்களிலும், ஹோட்டல்களிலும் அனுமதிக்காவிட்டால் உண்ணாவிரதம் இருந்து மடிவேன்!' என்று மிரட்டினாரா? "இன்று முதல் இரண்டு வாரத்திற்குள்ளாக எல்லா காங்காரஸ்காரர்களும் கைராட்டினத்தில் நூல் நூற்கத் தொடங்காவிட்டால், நான் உண்ணாவிரதத்தைத் தொடங்கிவிடுவேன்" என்று மிரட்டினாரா?......

காந்தியாருக்குத் தெரியும், இவைகளெல்லாம் நடக்கின்ற காரியமே அல்ல, என்பது! தான் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய காரியம் "ஹிந்துக்களை" மட்டும் பொறுத்ததாயிருக்கவேண்டும்! அப்போதுதான் காங்காரஸ்காரர்கள் மிரட்டுவார்கள்! பத்திரிகைகளும் ஓலமிடும்!

பீஹார் விஷயத்தில் முஸ்லிம் லீக் சும்மாயிருக்கப் போவதில்லை என்பது அவருக்குத் தெரியும். எப்படியும் இடைக்கால மந்திரிசபை தலையிட்டே தீரவேண்டும். ஆகையால், "ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காக மகாத்மா தம் உயிரையே பலிகொடுக்கத் தயாராயிருந்தாரே! இவரல்லவா மகான்!" என்ற பெயரை எளிதில் பெற்றுவிடலாம்! இதற்காகத்தான் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக மிரட்டுகிறார்!

இப்படி மிரட்டியவர்கள் எத்தனையோ பேர்! ஒரே ஒரு இளைஞரைத் தவிர, எல்லா உண்ணாவிரதக்காரர்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

குடி அரசு

1946-ஆம் நவம்பர் மீ 16உ

# இதுதான் நமது சுயராஜ்யமா?

இந்த நாட்டில் சுயராஜ்ய முயற்சி என்பது இந்த நாட்டு மக்களுக்குள் பல கட்சிகள் ஏற்பட்டு கட்சிப் போராட்டமும், கட்சிகளின் தனித்தனிக் கோரிக்கையும், சட்டம், சமாதானம், நாணயம், ஒழுக்கம் ஆகியவைகளுக்குக் கேடானதும் மாறானதுமான காரியங்களாக இருந்து வந்தது.

இதன் பயனாய்,

"உங்களில் பல மதம், பல இனம், பல ஜாதி, பல வகுப்பும், அவற்றின் ஒருவருக்கொருவர் போராட்டமும் இருந்து வருவதால் உங்களில் யாரிடம் சுயராஜ்யத்தை ஒப்புவிப்பது. இந்த நிலையில் நாங்கள் வெளியேறி விட்டால் இத்தனைக்காலமாக நாங்கள் இந்த நாட்டில் செய்துவைத்து இருக்கும் நலன்கள் எல்லாம் கெட்டுப் பாழாய்ப் போய்விடுவதுடன் நீங்களும் ஒருவருக்கொருவர் போராடிக்கொண்டு இந்நாட்டை இரணகளமாகவும் இரத்தக் களரியாகவும் ஆக்கிக்கொள்ளுவீர்கள். ஆகையால் நீங்கள் ஒற்றுமைப்பட்டு வாருங்கள்; உங்களிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டுப் போய்விடுகிறோம்"

என்று வெள்ளைக்காரர்கள் சமாதானம் சொல்லி வந்தார்கள். கூடுமானவரை ஒரு அளவுக்கு உள்நாட்டு ஜாதி மத இன வகுப்பு இல்லாமல் மக்களைக் காப்பாற்றியும் வந்தார்கள். இது நல்ல எண்ணமாக இருந்தாலும் இருக்கலாம், கெட்ட எண்ணமாக இருந்தாலும் இருக்கலாம். அவர்களே (பிரிட்டிஷாரே) கலகத்தையும், மனக்கசப்பையும், சந்தேகத்தையும் கிளப்பிவிட்டுக்கொண்டிருந்தவர்களாகவும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் ஆயிரக்கணக்கான மக்களோ ஏன் நூற்றுக்கணக்கான மக்களோ சாவதற்கு ஏதுவான கலகமோ கொலையோ லட்சக்கணக்கான ரூபாய் நட்டமாகும்படியான கொள்ளையோ நாசமோ ஏற்பட முடியாமல் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

இப்போது பிரிட்டிஷாரே மனமொப்பி சம்மதப்பட முடியாமல் சர்வதேச நிலையை அனுசரித்து இந்தியாவின்மீது தங்களுக்கு இருக்கும் அதிகாரப் பிடிப்பை விட்டுக் கொடுக்கவேண்டிய அவசியமிருந்ததால் கட்டுப்பாடும்பலமுமுள்ள இரு சமூகங்களிடம் அதாவது பார்ப்பனர்களிடமும் முஸ்லிம்களிடமும் அதிகாரத்தைக்கொடுத்துவிட்டு இன்னமும் உங்களுக்கு என்ன வேண்டும்? சேருங்கள் கொடுக்கிறோம் என்று சொல்லி அழைத்து உயர்ந்த பதவியில் தலைமைப் பீடத்தில் இந்த இருவகுப்பாரையும் உட்காரவைத்துவிட்டார்கள்.

இந்த இரு சமூகத்திற்குள் இருந்துவரும் விரோத உணர்ச்சியையும், மேல் ஜாதிக்காரர்கள் கீழ்ஜாதிக்காரர் என்பவர்களை அடக்கி ஒடுக்கி நடத்திவரும் கொடுமையையும், ஏமாற்றமான காரியங்களையும் தெரிந்தும் கண்டும் இருந்தும், அரசியல் கிளர்ச்சி என்னும்பெயரால் சட்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவைகளை லட்சியம் செய்யாமல் காலித்தனமாயும், அட்டூழியத் தன்மையாயும் நாசமும் நட்டமும் துன்பமும் தொல்லையும் ஏற்படும்படியாய், கட்டுப்பாடாய்ச் சிலர் காரியம்செய்து வருவதையும் மனதார அறிந்தும் அப்படிப்பட்டவர்களிடமே அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் பிரிட்டிஷார் ஒப்படைத்தார்கள் என்றால் இதில் நல்ல எண்ணமோ பெருந்தன்மையோ இருந்திருக்க முடியும் என்று யார்தான் சொல்ல முடியும்?

அதுமட்டுமா? சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் அடங்கியும், கட்டுப்பட்டும், நேர்மையாய் நடந்து வந்த மக்களைத் தங்களுக்குத் தேவை இருக்கும் வரை பாராட்டித் தட்டிக் கொடுத்துக் கொண்டுவந்து தங்கள் காரியம், முடிந்தவுடன் கலகக்காரர்கள் தங்கள் நலனுக்கு இணங்குகிறார்கள் என்றுகேட்டவுடன், ஒழுக்கமும் அடக்கமும் உள்ள மக்களைக் காலித்தனம்செய்தவர்களுக்குக்காட்டிக்கொடுத்து அவர்களையும் இவர்கள் வசம் ஒப்புவித்துவிட்டார்கள் இந்தப் பிரிட்டிஷார்கள் என்றால் இவர்களிடம் நாணயமும், யோக்கியப் பொறுப்பும் நன்றியறிதல் தன்மையும் இருக்கின்றன என்று யார்தான் சொல்ல முடியும்?

இன்று பிரிட்டிஷ்காரருக்குச் சற்றேறக்குறைய இந்த நாட்டில் தங்கள் சுரண்டலுக்கு வேண்டிய சௌகரியம் செய்து கொள்ளுவது என்பதைத் தவிர மற்றபடி இந்த நாட்டுச் சட்டம் சமாதானத்துக்குக் கட்டுப்பட்டப் பொது மக்களின் பாதுகாப்பையும் சுதந்திர வாழ்வையும்பற்றி சிறிதும் கவலையற்றவர்களாகவும் பொறுப் பற்றவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

இவர்கள் இந்த நிலையில் இருப்பதை ஒப்புக்கொண்டதும் கலகக்காரர்கள் வசம் ஆதிக்கமும் அதிகாரமும்வந்துவிட்டதும் தான் இன்று "சுயராஜ்யம்

கிடைத்துவிட்டது" என்றும், "இந்தநாடு விடுதலை அடைந்து விட்டது" என்றும் சொல்லும் படியாக ஆகி இருக்கிறது.

இப்படிப்பட்ட சுயராஜ்யத்தில்—விடுதலை அடைந்த நாட்டில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

முதலாவது யாரிடத்தில் எந்தக்கட்சியாரிடம் அவர்களை ஜனப்பிரதிநிதிகள் கட்சித் தலைவர்கள் என்று கருதி இராஜ்ய பாரத்தைப் பிரிட்டிஷார் ஒப்புவித்தார்களோ அந்தக் கட்சித் தலைவர்கள் இன்று போலீஸ் இராணுவக் காவலோடு ஊசலாடவும் வாழவுமான நிலையில் இருக்கிறார்கள். உதாரணமாகக் காந்தியாருக்கும், பண்டித ஜவகர்லாலுக்கும், அவர்கள் வாசஸ்ஸ்தலத்துக்கும் போலீஸ் காவலும் பந்தோபஸ்தும் அவசியமாகிவிட்டன.

அடுத்தபடியாக எங்கும் குழப்பம், எங்கும் கொலை, எங்கும் கொள்ளை, எங்கும் நாசவேலை, எங்கும் கட்டிடங்கள் இடிபடுதல், எங்கும் கட்டிடங்கள் கொளுத்தப்படுதல், எங்கும் பண்டங்கள் சூறையாடப்படுதல், பல இடங்களில் பெண்கள் அடித்துக்கொண்டு போகப்படுதல், சில இடங்களில் பலாத்காரமாய்க் கற்பழிக்கப்படுதல், ஏன் சில இடத்தில் ஒரு பெண்ணைப் பலர் பலாத்காரமாய்த் துன்பப்படுத்திக் கற்பழித்தல்,

முக்கிய பட்டணங்களில் 144, மக்கள் வீதியில் நடமாடக் கூடாது என்கின்ற உத்திரவு,

1,000, 10,000, 50,000 பேர்கள் கொலை செய்யப்படுதல், நடக்க நடக்க குத்தித்தள்ளுதல், வெட்டித் தள்ளுதல், மண்டையை உடைத்து வீழ்த்துதல், ஓட்டல்கள் நாசம், கோவில்கள் நாசம், ஜவுளிக்கடை முதலியன நாசம், இவ்வளவும் போதாமல் பலாத்காரமாய் மதம் மாற்றல் என்ற கூக்குரல்! இன்னும் என்னவேண்டும்? மத்திய அரசாங்க முதல்மந்திரி என்பவர் சுற்றுப் பிரயாணத்தில் கல்லடி பட்டு, காயம் பெற்று "தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்" - என்கின்ற தன்மையில் இராணுவ பாதுகாப்போடு "நான் பிழைத்தேன், எங்களப்பன் பிழைத்தார்" என்று கூவிக் கொண்டு வீடுவந்து சேர்தல்,

இனியும் பாருங்கள், மற்ற ஊர்களில் காங்கரஸ் குழப்பக்காரர்கள் மற்ற கட்சிக்காரர்களின் கொடியை இறக்கிகொளுத்திக்கொண்டு இருக்கும்போதே அந்தக் கருமத்தின் பலனாய் என்று சொல்லத்தக்கவண்ணம் முதல், இரண்டு, மூன்று, நான்கு ஆவது மந்திரிகளின் கார்களைப் பலாத்காரமாய் நிறுத்தி அவர்கள் வண்டிகளில் உள்ள கொடிகளைப் பிடுங்கிக் கொண்டு விரட்டுதல் முதலிய காரியங்கள் நடக்கின்றன.

இவ்வளவுதான் இந்த சுயராஜ்ய, விடுதலைபெற்ற நாட்டில் என்றால்,

உணவு இல்லை, உடை இல்லை, என்ற கூப்பாடுகள் ஏழை வீட்டில் மாத்திரமல்லாமல் எஜமானர்கள் பிரபுக்கள் என்று சொல்லப்படும் மக்கள் வீடுகளிலும் தாண்டவமாடுகின்றன என்றால்,

இவை மாத்திரமல்லாமல் வரிமேல் வரி என்பதோடு சர்க்காரார் கடன்மேல் கடனாக 30 கோடி 40 கோடி என்பதாகக் கடனும் வாங்குகிறார்கள் என்றால்,

இவ்வளவுதானா? இன்னமும் கேளுங்கள்.

எங்கும் வேலை நிறுத்தம், வேலை நிறுத்தத்தை ஒழிக்கச் சுடுதல், குண்டாந்தடியால் அடித்து கால், கை, மண்டை முதலியவற்றை உடைத்தல், மக்கள் மேல் நடத்தல், வேலை நிறுத்தம் செய்தவர்கள் வீட்டில் கொள்ளை இடுதல் வீடுகள் காரியாலயங்கள் நாசமாக்குதல், 100 கணக்காக 500 கணக்காகச் சிறைப்படுத்துதல், பழி வாங்கும் நீதி செலுத்துதல் முதலியன இந்தியநாடு முழுவதிலும் நடக்கின்றன.

அப்புறம் என்ன வேண்டும்? இவ்வளவு கஷ்டத்திலும், நெருக்கடியிலும், காலிகளுக்கு, அயோக்கியர்களுக்கு, கேடிகளுக்கு, கிரிமினல் குற்ற விடுதலைக் கைதிகளுக்கு நல்வாழ்வு, கொள்ளை இலாபம், புதையல் கிடைத்ததுபோல் செல்வம், இரசவாதம் செய்து கள்ளநோட்டு அடித்து சொர்ணம் செய்ததுபோல் செல்வப் பெருக்கம் விளைந்தவண்ணமாக இருக்கவும் பயந்தவர்கள், நாணயமானவர்கள், சாதுக்கள், யோக்கியர்கள் ஆகியவர்கள் காலிகளாலும் சுயராஜ்ய அரசாங்க சிப்பந்திகளாலும் துன்பப்படவும் தொல்லைப்படவுமான காரியங்கள் மலிந்து கிடக்கின்றன. இன்னும் இரகசிய சங்கதிகள் அநேகம், அதாவது எப்படிப்பட்டவர்கள் தேசபக்தர்கள் எவை தேசபக்திகள் என்பன போன்ற சங்கதிகள்! இவையெல்லாம் இந்த சுயராஜ்யத்திலும் சுயராஜ்ய முயற்சியிலும் தான் நடக்கின்றன. வேறு எங்காவது இப்படி நடக்கின்றது என்று யாராவது எந்த நாட்டிலாவது சொல்லமுடியுமா என்று சிந்தித்துப் பாருங்கள்.

ஆகவே இதுதான் நமது சுயராஜ்யமா என்று கேட்கிறோம்.

---

## தோழர் பாலகுருவின் முகவரி

N. E. பாலகுரு,
C/o அரண்மனை,
பழயகோட்டை (Via) ஈரோடு.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த மனிதனுக்கோ மனிதத் தன்மையுடைய மனிதனுக்குப் பிறந்தவனுக்கோ ஏற்பட்டதல்ல

இந்த ஆட்சி ஏற்பட்டுவிட்டதாலேயே, ராமராஜ்யம் ஏற்படுவதாலேயே நமது சூத்திரத் தன்மையும், பஞ்சம, கடை சாதித் தன்மையும் மாறிவிடப் போவதில்லை. முஸ்லிம் ஆட்சி ஏற்படுவதால் அல்லது நம்மை ஒருவன் முஸ்லிமாக மாற்றிவிடுவதால் நமக்கு இன்றைய சமுதாய இழி நிலையை, கீழ் நிலையை விட மோசமான தன்மை எதுவும் வந்துவிடப்போவதில்லை. நம்மில் இருந்து இஸ்லாமாக மாற்றப்பட்டவர்களும், கிருஸ்தவர்களாக மாற்றப்பட்டவர்களும் அல்லது தானே மாற்றமடைந்தவர்களும் இன்று எதில் கஷ்டப்படுகிறார்கள்? எதில் கெட்டுப் போய்விட்டார்கள்? இந்து அரசர் ஆட்சியில்தான் (சம்பந்தர் காலத்தில்) மதம் மாற்ற மக்கள் கழுவேற்றப்பட்டார்கள். இஸ்லாம் ஆட்சியில்தான் ராமானுஜர் காலத்தில் வைணவ மதப்பிரசாரம் செய்து மக்களை வைணவ மதத்திற்கு மாற்றி, கடை ஜாதியார் முதல் ஜாதியாராக ஆக்கப்பட்டதாகக் கதை சொல்லுகிறார்கள். அதற்கு யாரும் ஆட்சேபித்ததாக ஆதாரம் காணோம். ஆகவே இந்து வேறு மதத்திற்குப் போவதென்றால், மாறப்படுவதென்றால் கடை ஜாதியான் மேல் ஜாதியாக ஆக்கப்பட்டான் என்றுதான் அர்த்தம். ஆகவே மதம் என்பது மக்களுக்குத் தொண்டு ஆற்றுவதையும், மற்றவர்களுக்கு துன்பம், இழிவு ஏற்படாமல் இருப்பதையும் கடனாகக் கொள்ளுவதையும் அடிப்படையாகக் கொண்டது என்பதை இந்த டிப்பு நினைவு நாள் படிப்பினையாகக் கொண்டு மதத்துவேஷ உணர்ச்சியை மறந்து மனித சமத்வ உணர்ச்சி கொள்ளுங்கள். அரசியலில் தொண்டர்கள், பக்தர்கள் யாரும் மதத்தைப்பற்றி சிந்திக்காதீர்கள். மதத்திற்காக உயிர்விடும் பைத்தியக்கார எண்ணம் கொள்ளாதீர்கள்.

வணக்கம்.

ரோஜா முத்தையா

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களும் கல்லுப்போலப் பிழைத்துக் கொண்டார்கள்! காந்தியார் முதல், ஸ்டாலின் ஜெகதீசன் வரையில், ப்ரொபஸர் அவாரிமுதல் லண்டன் சாட்டர்ஜீ வரையில், எல்லோரும் ஏதோ ஒரு பெண்ணின் கையினால் ஆரஞ்சுச் சாறோ, இட்டிலியோ சாப்பிட்டுப் பிழைத்துத்தானிருக்கிறார்கள்!

ஆனால் ஒரு சந்தேகம்! விஷத்தின் மூலமோ, தூக்குப் போட்டுக் கொண்டோ, கிணற்றில் விழுந்தோ தற்கொலை செய்துகொள்ள முயலுவது இந்தியன் பீனல்கோட்—சட்டத்தின்கீழ் குற்றம்! ஆனால் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருப்பது மட்டும் "தற்கொலை முயற்சி" என்ற குற்றத்தின்கீழ் வாராதோ?—காந்தியாரைத் தண்டிப்பதற்கோ, விசாரிப்பதற்கோ யாருக்குத் துணிவிருக்கிறது? போஸ்டாபீசைக் கொளுத்தினவர்களே வீரர்களாய் உலவும்போது இந்தியன் பீனல்கோடு—காங்கரஸ் ஞானிகளை என்ன செய்துவிடமுடியும்?

என்னைப் பொறுத்தவரையில், காந்தியார் நீடூழி வாழட்டும்! முழு சுயராஜ்யம் வரப்போவதையும் கண்ணாரக் கண்டு களிக்கட்டும்! அப்போது தம் கண்ணுக்கினிய கதர்க் கொள்கை மண்மூடிப் போவதையும் காணட்டும்! இந்தியா பல சுயேச்சை நாடுகளாகப் பிரிவதையும் பார்க்கட்டும்! "ராமராஜ்யம்" என்ற ஆகாயக் கோட்டை தகர்ந்து வீழ்ந்து, ராமன் பெயர் எல்லோராலும் நிந்திக்கப்படும் காட்சியையும் காணட்டும்!

ஆனால் தற்கொலையைவிடக் குரூரமான உண்ணாவிரதம் மட்டும் வேண்டாம்! ஏதோ, 10 நாளைக்கு

## கோவை மாவட்டத் தோழர்கட்கு

நமது மாவட்டத்தில் நான் நேரில் ஒவ்வொரு தோழர்களிடமும் கொடுத்துள்ள நிதி, டிக்கெட்டுகளைப் பெரும்பாலும் வசூல் செய்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இதுவரையில் வசூலாகியிருக்கும் தொகையையும், இன்னும் வசூலிக்கும் தொகையையும் மீதமுள்ள டிக்கெட்டுக்களையும் இன்னும் சில நாளில் நான் நேரில் வரும் பொழுது கொடுத்து உதவக் கோருகிறேன். தயவுசெய்து வசூலைத் துரிதப்படுத்தவேண்டுகிறேன்; நமக்குப் பின் அணியில் இருந்த மற்ற மாவட்டத்தார் துரிதமாக வேலை செய்கிறார்கள்.

N. E. பாலகுரு.

## மணமகன் தேவை

ஆங்கிலத்தில் நான்காவது பாரம் வரை படித்த, சங்கீதப்பயிற்சியுடைய, தையல்வேலை பரீட்சையில் தேர்ந்து நற்சாட்சிப் பத்திரம்பெற்ற, 1000 ரூபாய் சொத்தும், சுமார் 500ரூபாய் பெறும்படியான நகையும் உள்ள வசீகரத் தோற்றமுடைய குடியான வகுப்புப் பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகன் சுமார் 25வயதுடையவராகவும், 5½ அடி உயரத்திற்குக்குறைவுபடாதவராகவும், 34 அங்குலம் மார்பு சுற்றளவிற்குக் குறைவுபடாதவராகவும், எஸ். எஸ். எல். சி. வகுப்புக்குக் குறையாத படிப்புடையவராகவும், நல்ல தோற்றமுடையவராகவும் எதிர்பார்க்கப்படுகின்றது. விருப்பமுள்ளவர்கள் தகுதி, நிலைமை, வகுப்பு ஆகியவைகளுடன் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும்.

குடி அரசு நிலையம், ஈரோடு.

"மொஸாம்பிப் பழரசம்" மட்டும் அருந்தினால் உடல் நலம் பெறும் என்று கருதினால் பேஷாகப்பட்டினி இருக்கட்டும்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியாக்கினால் ஒழிய, இதைப்பற்றி எல்லா மக்களையும் தங்கள் சுயேச்சையான அறிவைக்கொண்டு சிந்திக்கச் செய்தால் ஒழிய இந்த மதப் போராட்டம் அடியோடு ஒழியப்போவதில்லை, மக்களுக்குச் சாந்தியோ மனிதாபிமானமோ ஏற்படப் போவதில்லை.

### மதப்போர்தான் அரசியல்

இன்றைய அரசியலில் மதம் மறைந்து கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? இந்த நாட்டை எந்த மதக்காரன் ஆளுவது என்பதற்கல்லாமல் மற்றபடி இந்த நாட்டு மக்கள் எந்தக் கடவுளை வணங்குவது, எந்த மோட்சத்துக்குப் போவது என்ன பிறப்பை எடுப்பது, என்ன கொள்கையைப் பின்பற்றுவது என்பதற்காகவா? என்று கேட்கிறேன்.

கிறிஸ்தவ மதமும், இஸ்லாமிய மதமும் "ஒரு கடவுள்தான் உண்டு, மக்களில் ஒரு ஜாதித்தான் உண்டு" என்று சொல்லுகின்றன. அந்தந்த மதக்காரர்களும் அப்படியே நம்பி அந்த மதத்தின் நடந்துகொண்டும் வருகிறார்கள். ஆனால் அவர்கள் இருவர்கள் அல்லாத இந்த நாட்டு மக்கள் ஆரிய பழங்கால காட்டுமிராண்டி மதத்தைச் சேர்ந்தவர்கள் பல கடவுள்களை கற்பித்துக் கொண்டு, மக்களில் பல ஜாதிகள் இருப்பதாக ஏற்பாடு செய்துகொண்டு, நடைமுறையிலும் அதுபோலவே பல கடவுளையும் அக்கடவுள்களுக்கு உருவங்களையும் வைத்துப் பூசை செய்துகொண்டு, பல ஜாதியாகப்பேதப்படுத்தி,நடத்தி ஒரு ஜாதியை ஒரு ஜாதி அழுத்தி அடக்கி ஆண்டு வருகிறார்கள். இந்த நிலை இஸ்லாம் கிருஸ்து அல்லாத இந்து மதத்திற்கு அடிப்படையிலேயே மாறுபட்ட நிலையாக இருப்பதோடு இந்த இழிந்தன்மையில் உள்ள மக்கள் அறிவு வளர்ச்சியும், மனிதத் தன்மையும், மானஉணர்ச்சியும் கொண்டால் எந்த மனிதனும் தன் மதத்தைத் தானே இகழவும், வேறு மதத்திற்குச் சாடவும் நினைத்துத்தான் தீருவான். ஆதலால் மதம்மாறும்உணர்ச்சி ஏற்படாமல் இருக்கவும், இன்றைய காட்டுமிராண்டி நிலையைப் பாதுகாக்கவும் செய்யப்படும் முயற்சிகளே தான் பெரிதும் இன்று மதப் போராட்டமாகவும் அரசியல் போராட்டமாகவும் இருந்து வருகின்றன. மனிதர்கள் எந்த மதத்தில் இருந்தாலும், அவர்கள் எந்த மதத்திற்குப் போனாலும் மற்ற மதத்தைச் சார்ந்த மனிதனுக்கு அதனால் கவலை ஏன் ஏற்பட வேண்டும்? என்பது எனக்குத் தெரியவில்லை.

### அரசியலில் வகுப்பு உணர்ச்சி

இன்றைய அரசியல் ஸ்தாபனத்திற்கு எதற்கும் ஜாதிமத பேதம் இல்லை என்றால் அரசியல் தலைவர்கள் ஜாதிமதப் பேச்சு ஏன் பேசவேண்டும்? எந்த மதக்காரனையோ எந்த ஜாதியானையோ அல்லது சந்தேகத்தின்பயனாய் ஆசைப்படுகிற அல்லது ஜாதியால்கஷ்டப்படுகிற மக்களைப் பெருவாரியாகக் கொண்டு சுயராஜ்ய சர்க்காரை அமைத்தால் என்ன தப்பிதம் ஏற்பட்டுவிடும்? என்பது எனக்குத் தெரியவில்லை. 'முஸ்லிமிடம் அதிகாரம் போனால் எல்லோரையும் முஸ்லிமாக்கி விடுவான்', "தாழ்ந்த ஜாதிக்காரனிடம் அதிகாரம் போனால் ஜாதி முறையைக் கெடுத்துவிடுவான்" என்பதல்லாமல் வேறு என்ன காரணத்தால் முஸ்லிமோ தாழ்ந்த ஜாதிக்காரன் என்பவனோ அவனவன் சந்தேகமற, பயம் ஒழிய பதவியில் அமர தடை செய்வதையே, மறுப்பதையே இன்றைய அரசியல் போராட்டமாகச் செய்யவேண்டும்? என்று கேட்கிறேன்.

இந்தநாட்டு அரசியல் ஸ்தாபனம் கோரும் சுதந்திரத்தை வேண்டாமென்றோ, பிரிட்டிஷ் ஆட்சியை விரட்டி அடிப்பதை வேண்டாம் என்றோ எந்த மத ஜாதி ஸ்தாபனங்களாவது தலைவர்களாவது எங்காவது ஒரு வார்த்தையாவது சொல்லியதுண்டா? இன்று நேற்றாவது சொன்னார்களா? இந்து அரசியல் தலைவர்கள் வைசிராய் வீட்டுக்கும் பிரிட்டிஷ் மந்திரிகள் இடத்திற்கும் சென்றுவருவதுபோலவும் பேசிவருவது போலவும்தான் மற்ற முஸ்லிம், தாழ்ந்த ஜாதி, அரசியல் தலைவர்களும் போய்க்கொண்டும் வருகிறார்கள் என்பதல்லாமல் புதிய மாதிரியாக யார்?யார்? வீட்டிற்குக் காவடி தூக்குகிறார்கள்? என்பது விளங்கவில்லை.

### மதம் மாறினால் குற்றம் என்ன?

மதம் மாற்றுவதிலோ அல்லது மதம் மாறுவதிலோதான் ஆகட்டும், மாறாதவர்களில் யாருக்கு என்ன கெடுதி என்று கேட்கிறேன். முதலாவதாக எடுத்துக்கொண்டோமேயானால் யார் யாரை மதம் மாற்றாமல் இருந்திருக்கிறார்கள்? இன்றைக்கும் இந்த திராவிட நாட்டில் ஆரிய மதத்தைச்சேர்ந்த மக்கள் இத்தனை கோடிப் பேர்கள் இருக்கக் காரணம் என்ன? இதில் சைவர் வைணவர் இத்தனைபேர் இருக்கக் காரணம் என்ன?

அதுபோலவே பௌத்த ஜெயின சமண மத மக்கள் இத்தனை பேர் இருக்கக் காரணம் என்ன?

அதுபோலவே முஸ்லிம்கள் இத்தனை கோடிப் பேர்கள் இருக்கக் காரணம் என்ன?

அதுபோலவே கிருஸ்தவர்கள் இவ்வளவு பேர்கள் இருக்கக் காரணம் என்ன?

ஒன்று அவர்களாக ஒரு மதத்தைவிட்டு வேறு மதத்தில் சேர்ந்திருக்க வேண்டும், அல்லது அவர்களை மற்றவர்கள் பலாத்காரமாகவோ மனமாற்றியோ சேர்த்து இருக்கவேண்டும். இந்த மதங்கள் யாவும் இந்த நாட்டுக்குச் சிறப்பாகத் திராவிடநாட்டுக்கு வெளியில் இருந்து வந்த மதங்கள்தானே? இதற்காக ஒருவருக்கொருவர் ஆடுகளைத் தின்ன புலிகள் சண்டை இடுவதுபோல் ஏன் சண்டைப் பிடித்துக் கொள்ள வேண்டும்? ஒரு மனிதன் இந்து மதத்தில் இருந்து அன்னிய மதத்திற்குச் சேர்ந்துவிட்டான் என்றோ சேர்க்கப்பட்டுவிட்டான் என்றோ வைத்துக் கொள்ளுவோம். இதனால் மீதி இருக்கும் இந்துக்களுக்கு ஏற்பட்ட கெடுதி என்ன? அல்லது சேர்க்கப்பட்டவனுக்குத்தான் ஏற்பட்ட, ஏற்படப் போகும் கெடுதி என்ன? எதற்காக வேறு மதத்திற்கு மாறிவிட்டான் என்றோ, மாற்றப்பட்டுவிட்டான் என்றோ மற்றவர்கள் ஆத்திரப்படுவது? மற்ற மதத்திற்கு போனவன் நரகத்துக்குப் போய்விடுகிறானா? அல்லது வேறு விதத்தில் வாழ்க்கையில் தொல்லைப்படுவானா? அப்படித்தொல்லைப்படுவானேயானால் இந்த நாட்டு மக்களில் 8, 9-கோடிபேர்கள் முஸ்லிமானவர்களாக இருக்கிறார்களே, அவர்கள்படும் கஷ்டமென்ன? முஸ்லிம் ஆகிவிட்டவனுக்கு ஏற்பட்ட நஷ்டமென்ன? அனுபவிக்கும் தொல்லை என்ன? அது போல் இந்த நாட்டில் கிருஸ்தவனாக ஆகிவிட்ட ஒரு கோடி மக்கள் படுகிற கஷ்டமென்ன? அனுபவிக்கிற தொல்லை என்ன? இங்கு இந்து மதத்தில் பறையனாகவோ சண்டாளனாகவோ சூத்திரனாகவோ இருக்கிறவன், வேறு மதத்திற்கு, சிறப்பாக இஸ்லாம்மதத்திற்குப்போனால் அந்த மதத்தாருள் அவன் சரிசமானமான மனிதனாக ஆகிவிடுகிறான் என்பதல்லாமல் நஷ்டமென்ன? கஷ்டமென்ன? என்று கேட்கிறேன். மறுபடியும் அவன் இஷ்டப்பட்டால் அவனுக்கு இஷ்டமான மதத்திற்குப் போகலாமே. கூடாது என்று யார் சிறையில் வைத்துவிடுகிறார்கள்? தோழர் F. G நடேசய்யர் கிருஸ்தவரானார்; பதவி பணம் சம்பாதித்துக் கொண்டார்; மறுபடியும் பிராமணராகவே ஆகிவிட்டார். இதில் யாருக்கு என்ன ஆபத்து?

மதம் மனிதனுடைய சொந்த ஆத்மார்த்தத்திற்கா? அல்லது மற்றவர்களுடைய நிர்பந்தத்திற்கா? ஆகவே மதத்தை வைத்து, மதப் போர்வைப் போட்டுக்கொண்டு மற்ற மக்களை ஏமாற்றி மேன்மையாக வாழும் மக்கள்தான் இது விஷயத்தில் கவலைப்படுவார்களே தவிர சாதாரண யோக்கிய மனஉணர்ச்சி உள்ள மனிதன் எவனும் ஒருவன் வேறு மதத்திற்குப் போகிறானே என்று கவலைப்பட இடமே இல்லை என்பதோடு 'எப்படியாவது அவனுக்கு பறப் பட்டம், சூத்திரத்தன்மை போனால் நலம்" என்போம்.

இந்த மதப் பூச்சாண்டிக்குப் பயந்து மதமாற்றத்துக்காகக் கவலைப்படுகிறவர்கள் ஆராய்ச்சி அறிவு இல்லாதவர்கள் என்றுதான் சொல்லுவேன். அதுபோலவேதான் மற்ற மதக்காரர்களுக்கும் சொல்லுகிறேன்; மதத்துக்காக ஏன் கவலைப்படவேண்டும்? "இஸ்லாத்துக்காக உயிரை விடுவேன்", "இந்து மதத்திற்காக உயிரை விடுவேன்", "கிறிஸ்து மதத்துக்காக உயிரை விடுவேன்" என்பனபோன்ற உயிரற்ற வீராப்புப்பேச்சுகளில் என்ன அறிவுடைமை, அவசியம் உடமை இருக்கிறது? என்பது எனக்குத் தெரிவில்லை. இந்தப் போதனை மக்களுக்கு ஏற்றுவாறு தனிப்பட்டகூட்டத்தின் சுயநலம் அல்லது அறியாமை என்றுதான் நான் கருதுகிறேன்.

மதத்துக்காக உயிர்விடத்தானா கடவுள் மனித உயிரைப் படைத்திருப்பார்? இது மதத்தின் தத்துவமறியாத அறிவிலிகள் பேசும் பேச்சாகும். இது நாட்டுக்காக உயிர்விடுங்கள் என்று முட்டாள்களுக்கு உபதேசம்செய்து போராட்டத்தைத் துவக்கி சுயநல அயோக்கியர்கள் பொறுப்பற்றவர்கள் ஆட்சியில் அமருவதுபோல் பித்தலாட்டமான காரியம் என்றே சொல்லுவேன். இன்றைய மதப்போராட்டத்தில் போராட்டத்தைக் கிளப்பிவிட்டதலைவர்கள் சுகமாக அரண்மனையில் வாழ்கிறார்கள். நல்ல போலீசு ராணுவ பந்தோபஸ்தோடு வாழ்கிறார்கள். யாதொரு பாவமும் அறியாத ஒரு பலனும் அடைய முடியாத சாது பாமர மக்கள் ஆயிரக்கணக்கில் மடிகிறார்கள். சித்திரவதையில் துன்பமடைகிறார்கள். இதுவா மதப் பாதுகாப்பு? என்றும் இதுவா மதத்துக்காக செய்யும்போராட்டம்? என்றும் கேட்கின்றேன்.

தோழர்களே! வாலிபர்களே! மதம் என்பது மற்றவனுக்குத் தொண்டு செய்வதேதவிர மற்றவனை அடக்கி ஆள்வதோ மற்றவனுக்கு தொல்லை விளைவிப்பதோ மற்றவனிடம் காலித்தனம் செய்வதோ அல்ல. காலித்தனம் எந்த மதத்தையும்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.

ரோஜா முக்கையா